# பரிசுத்தம்.

*எபி 12:14 யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.*
*1 பேதுரு 1:15 உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.*
*வெளி 22:11 அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.*

**"ஹாஜியோஸ்"** என்று கிரெக்க மொழியில் தேவனுடைய பரிசுத்தத்தின் கருத்தை விளக்கும் வார்த்தையை பற்றி 'கிரிமர்' என்ற வேதாகம பண்டிதர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார், " தேவனுடைய பரிசுத்தம், பாவத்தின் மேல் உள்ள அவரது எதிர்ப்பை குறிப்பிடுகிறது. இந்த எதிர்ப்பை, அவருடைய பிராயச்சித்தம், மீட்பு, நியாத் தீர்ப்பு போன்ற வடிவங்களில் நாம் காண முடியும். தேவனுடைய பரிபூரண தூய்மையே அவரது பரிசுத்தம். அதற்கு உலகத்தோடு உறவு இல்லை. அவரது பரிசுத்தத்துக்கு இருக்க முடிகிற ஒரே உறவு, அவரது சுய சித்தத்தினால் வெளிப் படுகிற அன்பு மாத்திரமே. இத்தகைய அன்பின் மூலமாக, தேவனுடைய மக்களை பரிசுத்தப்படுத்துவதில், சுத்திகரிப்பதில், மீட்பதில், தேவனுடைய பரிசுத்தம் தன்னை வெளிப் படுத்துகிறது. பிராயச்சித்தத்தில், மீட்பில், அது போலவே அதேசமயத்தில் நியாயத்தீர்ப்பிலும் - தேவனுடைய பரிசுத்தம் தன்னை காண்பிக்கிறது." "தேவனோடு மனிதருக்கும் பொருட்களுக்குமான இந்த உறவு, தேவனால் மாத்திரமே உருவாக்கப்பட்டு ஏற்படுத்தப்படுகிறது. இந்த உறவுக்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும் - அவரது ஊழியத்துக்கு உபயோகப்படுத்தப்படுவதற்கோ அல்லது அவரது வேலைக்கான கருவிகளாக உபயோகப்படுத்தப் படுவதற்கோ அல்லது அவரது சொந்த மீட்கப்பட்டதான பந்தத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கோ - இந்த உறவு தேவனால் மாத்திரமே ஏற்படுத்தப்படுவது. "

நம் தேவன் மகா பரிசுத்தர். அவருடைய பிள்ளைகளான நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பது அவரது விருப்பம், சித்தம், கட்டளை. வேதாகமத்தின் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்று பரிசுத்தம். எல்லா விசுவாசிகளுக்கும் இருக்கிற ஒரு விருப்பம் **" நான் பரிசுத்தமாக இருக்க வேண்டும் "** என்பது. வருடத்தின் கடைசி நாட்களில் இதற்காக விசேஷித்த 'சுத்திகரிப்பு ஆராதனைகள்' நடத்தப்படுவதுண்டு. இது விசுவாசிகள் தங்களை பரிசோதித்து பார்த்து நல்ல தீர்மானங்களோடு புதிய ஆண்டுக்குள் கடந்து செல்ல மிகவும் உதவியாக இருக்கும்.

இந்த தருணத்தில், **வேதாகமம் பரிசுத்தத்தை பற்றி என்ன சொல்கிறது ? வேதாகமம் சொல்கிற 'பரிசுத்தம்' என்பது என்ன ? ஒரு மனிதர் எப்போது பரிசுத்தமாக்கப்படுகிறார் ? வேதாகமம் யாரை பரிசுத்தவான் என்று அழைக்கிறது ? ஒரு விசுவாசி பரிசுத்தமாக இருப்பது எப்படி ? ஒரு விசுவாசி எவ்வளவு பரிசுத்தமாக இருக்க வேண்டும் ? பரிசுத்தம் என்பது தேவன் தருவதா, அல்லது நாம் முயற்சி செய்து பெற்றுக்கொள்வதா ?** என்பது போன்ற சில கேள்விகளுக்கான விடைகளை இந்த வேத பாடத்தில் பார்ப்போம்.

இப்போது வேதாகமத்தில் **பரிசுத்தத்தை** பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றதான சில வசனங்களை பார்ப்போம்.

*அப் 20:32 இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் **பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும்** உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.*
*அப் 26:18 அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் **பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய** சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.*
*1 கொரி 1:2 கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் **பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும்,** பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*
*1 கொரி 6:11 உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், **பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்,** நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

*எபி 10:10 இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி **நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.***

*எபி 10:29 தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, **தன்னைப் பரிசுத்தஞ்செய்த** உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.*

*யூதா 1:1 இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே **பரிசுத்தமாக்கப்பட்டவர்களும்**, இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:*

இவ்வசனங்கள், இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே **பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள்** என்ற அர்த்தத்தை குறிப்பிடுவதாக உள்ளன.

பரிசுத்தத்தைப் பற்றி சொல்கிற மற்ற சில வசனங்களை பார்ப்போம்.

*யோவான் 17:19 அவர்களும் சத்தியத்தினாலே **பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி,** அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.*

*2 கொரி 7:1 இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, **பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.***

*எபி 2:11 எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் **பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய** யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:*

*எபி 10:14 ஏனெனில் **பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை** ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.*

*எபி 12:14 யாவரோடும் சமாதானமாயிருக்கவும், **பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்;** பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.*

*வெளி 22:11 அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; **பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.***

வேதாகமத்தில் இவ்வசனங்கள், **'ஒரு விசுவாசி பரிசுத்தமாக்கப்படவில்லை,** அவர்கள் **பரிசுத்தமாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்,** அவர்கள் தங்களை இன்னும் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்ற அர்த்தத்தை குறிப்பிடுவதாக உள்ளன.

**அப்படியானால் இவ்விரு வகைப்பட்ட வசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக் கின்றனவா? இவ்வசனங்களை சேர்த்து நியாயப்படுத்துவது எப்படி ? எது சத்தியம் ? விசுவாசிகள் ஏற்கனவே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது இன்னும் பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா ?** இந்த கேள்விகளுக்கு நாம் தெளிவான பதில்களை அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். ஏனென்றால், தேவன் நம்மை ஏற்கனவெ பரிசுத்தப் படுத்தியிருக்கிறார் என்றால், நாம் மீண்டும் மீண்டும் பரிசுத்தமாக்கப் படவோ அல்லது கூடுதல் பரிசுத்தமாக்கப்படவோ தேவையில்லை. ஏனென்றால் தேவன் ஒரு காரியத்தை செய்தால் அதை பூரணமாகவே செய்வார். நாம் எதற்காக போராட வெண்டுமோ அதற்காகத்தான் போராட வேண்டும். தேவன் ஏற்கனவே தந்திருப்பதற்கு, செய்திருப்பதற்காக நாம் போராட வேண்டியதில்லை. தேவன் நம்மை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார் என்றால் அந்த பரிசுத்தத்தை மீண்டும் நாம் ஏதாவது செய்து அல்லது செய்யாமல் இருந்து அடைய வேண்டியதில்லை. அப்படி முயலுவது அவ்விசுவாசமாகும். அதே சமயம், நம்மை நாம் பரிசுத்தமாக்கிக்கொள்ள வேண்டும், அது நமது கடமை என்று தேவன் சொல்லி யிருந்தால், நிச்சயமாக நாம் அதை செய்ய வேண்டும். **ஆகவே எது உண்மை என்று அறிந்து கொள்வது, தேவனுடைய சித்தப்படியான பரிசுத்தத்தில் நாம் இருக்க மிக உதவியாக இருக்கும்.**

வேதாகமத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்து ஒன்றும் இல்லை. இவ்விரு வசனங்களும் சத்தியமே. ஆனால் **இவ்விரு வகையான வசனங்களும் உண்மையில் இரண்டு வெவ்வேறு விதமான பரிசுத்தத்தை பற்றி குறிப்பிடுகின்றன**. வேதாகமத்தில் முறையாக பார்ப்போமானால், **மூன்று வகையான பரிசுத்தத்தை** பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த தலைப்புகள் வேதாகமத்தில் அப்படியே கொடுக்கப் படவில்லை. வேத வசனங்களின் அர்த்தங்களின்படி, இத்தலைப்புகள் வேதபண்டிதர்களால் கொடுக்கப்பட்டுள்ளன.

**1. பரிசுத்த நிலமை.** இது இயேசுவை விசுவாசித்து சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களுக்கு அச்சமயத்திலேயே தேவனால் கொடுக்கப்படுகிற பரிசுத்தம். இது ஒருவர் இரட்சிக்கப்பட்ட வினாடியில் உடனடியாக தேவனால் கொடுக்கப்படுகிற பரிசுத்தம். *(1கொரி1:2 )*

**2. தொடர்ந்து நடைபெறுகிற பரிசுத்தம்.** இது இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையில் வாழுகிற ஒரு விசுவாசியின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் செய்வது. இவ்விசுவாசியின் வாழ்வில் பாவத்தை நீக்கி, பரிசுத்த ஆவியானவரின் கனியை உருவாக்கி இதன் மூலமாக அனுபவப்பூர்வமாக அவரை தேவனுக்கென்று பிரித்தெடுக்கிற பரிசுத்த ஆவியானவரின் செயல். இது ஒரு விசுவாசியின் வாழ்வில் தொடர்ச்சியாக நடைபெறுவது. *( 1 தெச 5 23 ).*

**3. பூரண பரிசுத்தம்.** ஒரு விசுவாசி மரணமடைந்து இயேசுவிடம் செல்லும்போதோ அல்லது இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்போதோ, அவருக்கு கிடைக்கும் பூரணமான பரிசுத்தம். *( 1 யோவான் 3:2 )*

**இவற்றைப்பற்றி இப்போது விரிவாக படிப்போம்.**

முதலில், வேதாகமத்தில் **பரிசுத்தம்** என்று குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தையின் அர்த்தத்தை நன்றாக மனதிலாக்கிக்கொள்வோம்.

தமிழ் வேதாகமத்தில் **'பரிசுத்தம்'** என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தைக்கு ஆங்கில வேதாகமத்தில் **holiness, sanctification, hallow, saint** போன்ற பல வார்த்தைகள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றுக்கான பல கிரேக்க வார்த்தைகளும் ஒரே கிரேக்க அடிப்படை வார்த்தையில் இருந்து தருவிக்கப்பட்டவைகளே. தமிழ் வேதாகமத்தில் இந்த அனைத்து வார்த்தைகளுமே **'பரிசுத்தம்'** என்றே குறிப்பிடப்பட்டுள்ளன.

**பரிசுத்தம் என்ற வார்த்தைக்கான தமிழ் அர்த்தம்;**

1. Holiness, sanctity, purity, immaculateness. தூய்மை.
2. Cleanliness, as of dress; clearness, as of water; துப்புரவு. (சென்னை பல்கலைக்கழக பேரகராதி )

**Holiness** என்ற வார்த்தைக்கு தமிழ் அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தம் – தெய்வத்தன்மை வாய்ந்த, தெய்வத்துக்குரிய, தெய்வீ கமான,தூய்மையான, பழிபாவமற்ற, புனிதத்தன்மை.

**Holiness – பரிசுத்தம் என்ற வார்த்தைக்கான வேதாகம அர்த்தம்;**

நல்லொழுக்கத்திலும், நன்னெறியிலும் முழுமை அல்லது பரிபூரணம். தீமையில் இருந்து விடுதலை. தேவன் தன் மக்களிடம் இருந்து எதிர்பார்க்கிற அவருடைய சுபாவத்தின் முக்கிய மூலப்பொருள்களில் ஒன்று - பரிசுத்தம். பரிசுத்தத்தை தெய்வீ கம் என்றும் சொல்லலாம் பரிசுத்தம் என்ற வார்த்தையின் அர்த்தம் "தேவனுடைய வேலைக்காக ஒதுக்கப்பட்டது அல்லது பிரித்தெடுக்கப்பட்டது "

( ஹோல்மன் வேதாகம அகராதி ).

புதிய ஏற்பாட்டில் **"பரிசுத்தம்"** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்காக உபயோகப்படுத்தப் பட்டுள்ள மூல கிரேக்க வார்த்தைகளையும் அவற்றின் அர்த்தங்களையும் பார்ப்போம்.

**1. ஹாஜியாஸ்மொஸ்**; ( ஆங்: Holiness ). *ரோமர் 6:19,22; 1 தெச 4:7; 1 தீமோ 2:15; எபி 12:14.*

இவ்வார்த்தை, *1 கொரி 1:31; 2 தெச 2:13; 1 பேது 1:2*; ஆகிய இடங்களில் **"தேவனுக்காக பிரித்தெடுக்கப்படுவதை** "( ஆங்; **Sanctification** ) குறிப்பிடுகிறது. இவ்விடங்களில் இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தம் **"பிரதிஷ்டைப்பண்ணப்பட்டது, நியமிக்கப்பட்டது; உலகப்பிரகாரமான, களங்கமான, மாம்சப்பிரகாரமான உபயோகங்களில் இருந்து, தேவனுடைய உபயோகத்துக்காக பிரித்தெடுக்கப்படுவது**. *1 தெச 4:3,5,7* ஆகிய இடங்களில் **" தேவனுக்காக பிரித்தெடுக்கப்படுவதனால் கிடைக்கும் நிலமையையும், அதற்கு ஒத்ததான நடத்தையையும் " குறிப்பிடுகிறது.**

**2. ஹாஜியோசுனெ**: *ரோமர் 1:5; 2 கொரி 7:1; 1 தெச 3:13.* இவ்வார்த்தை இந்த இடங்களில் **"ஒருவரது சொந்த வாழ்க்கையில் 'பரிசுத்தத்தின்' குணாதிசயம் வெளிப்படுத்தப்படுவதை"** குறிப்பிடுகிறது.

**3. ஹாஜியோட்ஸ்**; (ஆங்; sanctity) "பரிசுத்தத்தின் சாராம்சமான குணம்". இவ்வார்த்தை *எபி 12:10* **தேவனுடைய பரிசுத்தத்தின் சாராம்சமான குணத்தை** குறிப்பிடுகிறது.

**4. ஹாஸியோட்ஸ்**; *லூக்கா 1:71; எபே 4:24*. கிருபைக்கும் சத்தியத்துக்கும் சரிசமமாக மரியாதை கொடுத்து வாழுபவர்களின் வாழ்வில் வெளிப்படுகிற **'பரிசுத்தத்தின்' குணாதிசயம்**; இதில் தேவனோடு உள்ள முறையான உறவு அடங்கியிருக்கிறது. இது இவ்விரு இடங்களிலும் நீதிகரணத்தோடு தொடர்பு உடையது.

**5. ஹாஜியோாஸ். பிரித்தெடுக்கப்பட்டது, பிரித்தெடுக்கப்பட்டவர்**. பாவத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது, பிரித்தெடுக்கப்பட்டவர். அதனால் **தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது, செய்யப்பட்டவர்**. புனிதமானது, புனிதமானவர்.
*லூக்கா 1:49; யோவான் 17:11; 1 பேதுரு 1:15,16; வெளி 4:8; 6:10*. ஆகிய இடங்களில், தூய்மையிலும் மாட்சிமையிலும் மகிமையிலும் பரிபூரண **பரிசுத்தரான தேவனைப்பற்றி** குறிப்பிடுகிறது.
*லூக்கா 1:35; அப் 3:14; 4:28,30; 1 யோவான் 2:20* ஆகிய இடங்களில் **இயேசுகிறிஸ்துவைப்பற்றி** குறிப்பிடுகிறது.
*மத் 1:18; 2 தீமோ 1:14; தீத்து 3:5; 1 பேதுரு 1:12; 2 பேதுரு 1:21; யூதா 20* ஆகிய இடங்களிலும் நான்கு சுவிசேஷங்களிலும், அப்போஸ்தலர், ரோமர் போன்ற இடங்களிலும் **பரிசுத்த ஆவியானவரைப்பற்றி** குறிப்பிடுகிறது.
வேதாகமத்தின் பல இடங்களிலும் ஹாஜியோாஸ் என்னும் இவ்வார்த்தை, **தேவனுக்காக பிரதிஷ்டை செய்யப்பட்ட மனிதர்களையும், பொருட்களையும்** குறிப்பிடுகிறது ( இவ்வசனங்களை இவ்வேதபாடத்தின் மற்ற பல இடங்களிலும் நாம் பார்க்கலாம் )

6. **ஹாஜியாஸொ**. ( **தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டது** )(Verb of Hagiasmos). ஹாஜியஸ்மொஸ் என்ற வார்த்தையின் வினைச்சொல்( ஆங்; to sanctify ). இவ்வார்த்தையானது.........
*1. மத்: 23:17,19* ஆகிய இடங்களில் தேவாலயத்தில் இருக்கிற **பொன்னையும், பலிபீடத்தில் வைக்கப்படும் பலியையும்** குறிப்பிடுகிறது.
*2. 1 தீமோ 4:5* **ஆகாரத்தை** குறிப்பிடுகிறது.
*3. 1 கொ 7:14* ல் ஒரு விசுவாசியின், அவ்விசுவாசியான **வாழ்க்கைத்துணையை** குறிப்பிடுகிறது.
*4. எபி 9:13* ல் இஸ்ரவேலரின் **சுத்திகரிப்பை** குறிப்பிடுகிறது.
*5, லூக்கா 11:2* **பிதாவின் நாமத்தை** குறிப்பிடுகிறது.
*6. யோவான் 10:36* ல் இயேசு, பிதாவினால் **பிரதிஷ்டை செய்யப்பட்டதை** குறிப்பிடுகிறது.
*7. யோவான் 17:19* ல் இயேசு தன்னை, தன் மக்களின் மீட்புக்காக **அர்ப்பணித்ததை** குறிப்பிடுகிறது.
*8. அப் 20:32* ல் விசுவாசிகள் **தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டிருப்பதை** குறிப்பிடுகிறது.
*9. யோவான் 17:17,19* ல் விசுவாசிகள் அவர்களது நடத்தையில் **இந்த உலகத்தில் இரு வேறுபட்டிருப்பதை** குறிப்பிடுகிறது. இது தேவன் அவரது வார்த்தையினால் செய்வது.
*10. 1 பேதுரு 3:15* **இயேசுவை கர்த்தராக ஏற்றுக்கொள்வதை** குறிப்பிடுகிறது.

நாம் வழக்கமாக வேதாகமத்தில் இருந்து உபயோகிக்கும் பல வார்த்தைகளின் ( உதாரணம்; **நீதி, இரட்சிப்பு, நீதிகரணம், மீட்பு, பிராயச்சித்தம், சோதனை** ...) மூல கிரேக்க வார்த்தைகளை பார்க்கும்போது அவற்றுக்கு ஆழ்ந்த அர்த்தங்கள் உண்டு. இது போன்ற பல காரியங்களுக்கும், நாம் நம்முடைய தாய்மொழியான தமிழில் உபயோகப்படுத்தும் பல வார்த்தைகளும் எப்போதும் அக்காரியங்களின் முழுமையான அர்த்தத்தை விளக்க முடியாமல் இருக்கலாம். ஒரு நாட்டில் வழக்கமாக செய்யப்படும் ஒரு காரியத்தை, அவரது மொழியில் விளக்கும்போது முழுமையாக அதன் அர்த்தத்தை மற்றொரு நாட்டவர் அறிந்து கொள்வது சற்று கடினமே.

புதிய ஏற்பாடானது, கிரேக்க உலகத்தின் அகில உலக கிரேக்க மொழியினால் ( **கொய்னெ கிரேக்** ) எழுதப்பட்டது. அப்படி எழுதப்பட்ட போது, கிறிஸ்தவத்தில் உபயோகப்படுத்தப்படும் பல பதங்களும், கிரேக்க மதங்களில் புழக்கத்தில் இருந்த வார்த்தைகளில் இருந்தே எடுக்கப்பட்டது. வேதாகமத்தை எழுதியவர்களுக்கு, வேதாகமத்தில் உபயோகப்படுத்தும்படியாக புதிய வார்த்தைகளை கொண்டு வர முடியாமல் இருந்தது. ஏனென்றால் அவ்வாறு கொண்டு வரப்படும் வார்த்தைகள் மக்களால் அறிந்து கொள்ளப்பட முடியாது. ஆகையால் ஏற்கனவே உபயோகத்தில் இருந்த பல வார்த்தைகளையே அவர்கள்

உபயோகப்படுத்த வேண்டியதாக இருந்தது. ஆனாலும், இவ்வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்படுவதனால், அவற்றின் அர்த்தங்களும் ஆவிக்குரிய தன்மையும் மாற்றப்பட்டு உயர்த்தப்பட்டன.

**வேதாகமத்தில், பரிசுத்தம், பரிசுத்தவான், என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து வார்த்தைகளும் ஒரே கிரெக்க அடிப்படை வார்த்தையில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டவைகளே.**

பரிசுத்தம் என்ற அர்த்தம் உடைய கிரேக்க உலகப்பிரகாரமான ( classical Greek )வார்த்தை **"ஹாஜிஸோ"** என்பதாகும். இதன் அர்த்தம், பலிபீடங்களையும், பலிகளையும் அவர்களது தேவர்களுக்காக நியமித்து, பிரதிஷ்டை பண்ணி, சுத்தீகரித்து வைப்பது.
இதற்கு சம்பந்தப்பட்டதான, புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தை **"ஹாஜியாஸோ"** என்பதாகும். இதன் அர்த்தம் " தேவனுடைய பரிசுத்தத்துக்கு ஏற்ற விதத்தில் அவரோடு ஒரு உறவு நிலையில் வைக்கப்படுவது".
இவ்விரு வார்த்தைகளுமே 'பிரதிஷ்டை பண்ணப்பட்டது' என்ற அர்த்தத்தில் மாத்திரம் உபயோகப்படுத்தப் படவில்லை. மாறாக, கிரேக்க மதங்களில் **"தேவர்களுக்காக"** பிரதிஷ்டை பண்ணப்பட்டது என்றும், கிறிஸ்தவ உலகத்தில் **"தேவனுக்காக"** பிரதிஷ்டை பண்ணப்பட்டது" என்ற அர்த்தத்திலும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

கிரேக்க மதங்களில், அவற்றில் தொழுது கொள்பவர்கள், அந்த தேவர்களின் சுபாவத்துக்கும், மதச்சடங்கு களின் சுபாவத்துக்கும் பங்காளிகளாகின்றனர். கிரேக்க மதங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டவர் என்றால் அவரது சுபாவம் பாவமானதாகவும், ஒழுக்கக்கேடானதாகவும், இழிந்த நிலையிலும் இருந்தது. கிறிஸ்தவத்தில், இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர், பரிசுத்த ஆவியினால் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்படுகிறார். அவர் முதாலாம் ஆதாமிலிருந்து, ஆதாமின் பாவம் மற்றும் அதற்கான தண்டனையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு, கடைசி ஆதாமாகிய இயேசுவுக்குள், அவரது நீதிக்குள் மற்றும் ஜீவனுக்குள் வைக்கப்படுகிறார். இவ்வாறாக, தேவனை தொழுது கொள்பவர், அவர் தேவனுக்காக பிரதிஷ்டை செய்யப்படுவதினால் அவர் தேவனுடைய சுபாவத்துக்கு பங்காளி ஆகிறார்.

நாம் எதற்காக இவற்றை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்றால், **" வேதாகமத்தில் பரிசுத்தம் என்ற வார்த்தை, நாம் வழக்கமாக நமது பண்பாட்டில் பரிசுத்தம் என்ற வார்த்தைக்கு கொடுக்கும் அர்த்தத்தின் படி மாத்திரம் உபயோகப்படுத்தப்படவில்லை.** நமது கிறிஸ்தவ பண்பாட்டில் நாம் பரிசுத்தம் என்ற வார்த்தைக்கு கொடுக்கும் அர்த்தம் "பாவம் இல்லாமல் அல்லது பாவம் செய்யாமல் இருப்பது. குறை கறை இல்லாமல் இருப்ப ". ஆனால் தமிழ் வேதாகமத்தில் "பரிசுத்தம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தைகள் அனைத்தும் இந்த அர்த்தத்தை மாத்திரம் குறிப்பிடுவதாக உபயோகப்படுத்தப்படவில்லை. இதை நாம் சரியாகப் புரிந்து கொண்டால், வேதாகமம் குறிப்பிடுகிற விதத்தில் சரியான, முறையான, அர்த்தமுள்ள பரிசுத்தத்தில், தேவனுக்கு பிரியமான விதத்தில் வாழலாம். இல்லையேல் மதச்சம்பிரதா யங்களின் படியான, அர்த்தமற்ற போதனைகளின்படியான, வேதாகமம் சொல்லாத பரிசுத்தத்தை தேடி,நாடி, ஓடி சோர்ந்து போன நிலையில், தோற்றுப்போன நிலையில் வாழ நேரிடலாம்.

இப்போது வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வகையான (விதமான அல்லது நிலைகளினாலான) பரிசுத்தத்தை பற்றி பார்ப்போம்.

## 1. பரிசுத்த நிலமை. ( Positional Sanctification, Instantaneous Sanctification. பரிசுத்தம் என்ற பதவி )

ஒருவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்கும்போது, அவர் இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்படுகிறார்.

*1 கொரி 1:2. கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் **பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும்,** பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*

*எபி 10:10 இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் **பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.***

இதன் காரணமாகத்தான், புதிய ஏற்பாட்டில், விசுவாசிகள் அனைவரும் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப் படுகின்றனர். இந்த **பரிசுத்தவான்கள்** என்ற தகுதி, ஒருவர் முயற்சி செய்து அடைவதோ எட்டிப்பிடிப்பதோ

அல்ல. இது, தேவன் தன்னுடைய கிருபையினால், பாவிகளை "பரிசுத்தவான்கள் என்ற நிலைமைக்குள் ( பதவிக்குள்) " அழைப்பது. இந்த நிலைமையில் இருந்துதான் ஒரு விசுவாசி தன்னுடைய விசுவாச வாழ்க்கைப்பயணத்தை தொடங்குகிறார்.

*கொலோ 3:12 ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;*

*எபி 3:1 இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்;*

இந்த பரிசுத்தம் என்பது, **தேவனோடு உள்ள ஒரு உறவு நிலை**. இந்த உறவு நிலைக்குள், ஒருவர் **இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தினால், இயேசுவின் நாமத்தினால்** பிரவேசிக்கின்றார்.

*அப் 26:18 அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.*

*1 கொரி 6:11 உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் **கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும்**, நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

இந்த "**பரிசுத்த பதவி, பட்டம்** விசுவாசிக்கு கிடைப்பது " **இயேசு சிந்திய இரத்தத்தினால் – இயேசுவின் மரணத்தினால்** "

*கொலோ 1:21 முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் **பரிசுத்தராகவும்** குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.*

*எபி 10:10 இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் **பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்**.*

*எபி 13:12 அந்தப்படியே, இயேசுவும் **தம்முடைய சொந்த** இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.*

*( எபி 10:29, எபே 5:27 )*

இம்மாதிரியான பரிசுத்தத்தை நாம் " நீதிகரணம் " என்றும் மற்றொரு பெயரிட்டு அழைக்கலாம். வேதாகமத்தில் மனிதர்கள் பரிசுத்தமாக்கப்பட்டதாக சுமார் 75 முறையும், பொருட்கள் பரிசுத்தமாக்கப் பட்டதாக சுமார் 40 முறையும், தேவன் பரிசுத்தராக சுமார் 14 முறையும் சொல்லப்பட்டிருக்கிறது.

**பரிசுத்தம் செய்பவர்கள்;**

1. தேவன் *( ஆதி 2:3, லேவி 21:15,23; 22:9; யோவான் 10:36; 1 தெச 5:23; யூதா 1:1.)*
2. இயேசு கிறிஸ்து *( 1 கொரி 1:30; எபேசி 5:26; எபி 2:11; 10;10,14; 13;12.)*
3. பரிசுத்த ஆவியானவர் *( ரோமர் 15:16; 1 கொரி 6:11; 2 தெச 2:13; 1 பேது 1:2)*

பரிசுத்த நிலமை, இயேசு கிறிஸ்துவில் எல்லா விசுவாசிகளுக்கும் சொந்தமானது.

பொதுவாக பலரும் 'பரிசுத்தம்" என்றால் 'பாவம் இல்லாத ஒரு நிலமை' என்றே மனதில் வைத்திருக்கிறார்கள். ஆனால், வேதாகமத்தில், எல்லா இடங்களிலும் "பரிசுத்தம்" என்ற வார்த்தை "பாவம் இல்லாத நிலமை" என்ற அர்த்தத்தை குறிப்பிடுவதாக உபயோகப்படுத்தப்படவில்லை. **இதை சரியாக மனதிலாக்கிக்கொள்வது பாவமற்ற ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ மிகவும் உதவியாக இருக்கும்.**

**கீழ்க்காணும் வேதாகம உதாரணங்களில் இருந்து இதை நாம் நன்கு புரிந்து கொள்ளலாம்.**

1. *1 கொரி 1:2 கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், **பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற** தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*

இந்த நிருபத்தை பவுல் அனைத்து விசுவாசிகளுக்கும் எழுதுகிறார். இது கொரிந்துவில் உள்ள விசுவாசிகளுக்கு மாத்திரம் உள்ளதல்ல. இந்த நிருபத்தில் பவுல் இந்த **விசுவாசிகளை** **பரிசுத்தமாக்கப் பட்டவர்கள்** என்று வாழ்த்துகிறார். இவர்கள் **இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்கள்** என்று அழைக்கிறார். இதே பரிசுத்தவான்களை இந்த நிருபத்தின் பின் பகுதிகளில் ஒழுக்கக்கேட்டுக்காக, குடிபோதைக்காக, ஆவிக்குரிய வரங்களை முறைதவறி உபயோகப்படுத்துவதற்காக, இன்னும் பலவித கொடிய பாவங்களுக்காக பவுல் கடிந்து கொள்கிறார். ஆனாலும் இவர்கள் **பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களாகவே இருக்கிறார்கள்.**

**2.** வேதாகமத்தில் **பொருட்கள் பரிசுத்தமாக்கப்பட்டதாக** சொல்லப்பட்டிருக்கிறது.

1. அப்பம் ( *1 சாமு 21:4*).
2. ஆசாரிப்புக்கூடாரமும் அதில் உள்ள சாதனங்களும் ( *யாத் 29:43; லேவி 8:10-15*)
3. ஆசாரியர்களின் ஆடைகள் ( *லேவி 8:30*)
4. மிருக ஜீவன்களும் வீடுகளும் நிலங்களும் ( *லேவி 27:9-29* )
5. உணவு ( *1 தீமோ 4:3-5* ).

**3.** தேவனும், இயேசு கிறிஸ்துவும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். **தேவன்**. (*லேவி 10:3; எண் 20:13; ஏசாயா 5:16; எசே 20:41; 28:22-25; 36:23; 38:16; 39:27; 1 பேதுரு 3:15*. **இயேசு கிறிஸ்து**: ( *யோவான் 10:36; 17:17-19* )

**4.** தேவனுடைய நாமம் பரிசுத்தமாக்கப்பட்டது ( *ஏசாயா 29:23; எசே 36:23* ).
**5.** குழந்தைகள் அவர்களது பிறப்பிலேயே, அதாவது பாவம் செய்யு முன்பே பரிசுத்தமாக்கப் பட்டார்கள். ( *எரே 1:5; லூக்கா 1:15-17;* )
**6.** புற ஜாதிகளில் உள்ள வீரர்களும்கணவர்களும் பரிசுத்தமாக்கப்பட்டனர். ( *ஏசாயா 13:3; 1 கொரி 7:14* ).
**7.** விசுவாசிகள் தேவனை பரிசுத்தப்படுத்துகிறார்கள். ( *1 பேது 3:15* ).
**8.** ஏழாம் நாள் பரிசுத்தப்படுத்தப்பட்டது ( *ஆதி 2:3* )

இந்த இடங்களில் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிசுத்தம் "பாவம் இல்லாத நிலை' என்பதை குறிப்பிடவில்லை என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். 'ஹாஜியஸ்மோஸ்' என் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை பல இடங்களிலும் குறிப்பிடுகிற அர்த்தம் – " **பிரதிஷ்டை செய்யப்பட்டது; ஒழுக்கக்கேடான, உலகப்பிரகாரமான, மாம்சப்பிரகாரமான உபயோகங்களில் இருந்து தேவனுடைய உபயோகத்துக்காக பிரித்தெடுக்கப்பட்டிருப்பது**". மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனங்களில், காணப்படும் பரிசுத்தம், பரிசுத்தமாக்கப்பட்டது, போன்ற வார்த்தைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த வார்த்தைகள் எல்லாமே, **"மற்ற உபயோகங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு தேவனுடைய உபயோகத்துக்காக, தேவனுடைய ஊழியத்துக்காக, தேவனுக்காக பிரதிஷ்டை செய்யப் படுவது "** என்ற அர்த்தத்தை குறிப்பிடுவதாகவே உள்ளன.

இந்த பரிசுத்தத்தில், தேவனைப்போல மனிதருக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு; ஏனெனில் மனிதர்தான் பரிசுத்தத்துக்காக தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். ( *லேவி 10:3; எண் 20:12-13; 27:14; எசே 20:40,41; 36:23.)*

### ஒருவர் எப்போது பரிசுத்த நிலைமையை பெற்றுக்கொள்கிறார் ?

விசுவாசியின் பரிசுத்தம் ஆதியிலேயே தேவனுடைய சித்தத்தின் படி தொடங்குகிறது ( *எபே 1:4* ). ஆனால் ஒரு விசுவாசியின் பரிசுத்தம், நடைமுறையில் **அவர் மறுபடியும் பிறக்கும் போதுதான் தொடங்குகிறது.**

***1 கொரி 6:11*** *உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்,* ***பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்,*** *நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

*( 1 யோவான் 2:29; 3:7-10; 4:7,17; 5:1-5,18; 1 பேதுரு 1:15-23 ). (லூக்கா 1:68-77, அப் 11:14-18; 15:7-11; 26:18; ரோமர் 1:16; ரோமர் 5:1-11; 6:16-23; 8:1-13; 15:15. 1 கொரி 1:30; 6:11, 19-20; 2 கொரி 5:17-18. கலா 5:24; எபேசி 1:4; 4:24; கொலோ 1:20-23 தீத்து 2:11-13; எபி 1:3. வெளி 1:6; 20:4-6 )*

### பரிசுத்த நிலைமையின் காரணம். ( பரிசுத்த நிலமை நமக்கு எதில் இருந்து கிடைக்கிறது ? )

***1 கொரி 1:2*** *கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள்* ***பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும்,*** *பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:*

இவ்வசனத்தின் முதல் பாகம் சொல்லுகிறது, பரிசுத்த நிலமையை நமக்கு இயேசு கிறிஸ்து தருகிறார். இதன் இரண்டாம் பாகம் சொல்லுகிறது, நாம் **பரிசுத்தவான்கள்** என்ற மேன்மை நிலைக்குள்ளாக **"அழைக்கப்பட்டவர்கள்"** என்று. இது ஒரு செயல்படுத்தப்பட்ட அழைப்பு. அழைப்பினால் பரிசுத்தவான்கள். இந்த பரிசுத்தம் நம்முடைய, "பரிசுத்தமாக இருக்க வேண்டும்" என்ற மனப்பாங்கினால் கிடைப்பது அல்ல. இது தேவனுடைய அழைப்பினால் கிடைப்பது.

*2 திமோ 1:9 அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.*

*( 1 பேதுரு 1:15; ரோமர் 1:6; 8:28; 1 கொரி 1:9; எபே 4:1; 1 திமோ 6:12; 1 பேதுரு 2:9.)*

தேவன் நமக்கு தந்திருப்பது எல்லாமே, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் அவற்றின் ஆவிக்குரிய காரியங்கள், இவற்றின் அடிப்படையிலேயே நமக்கு கிடைக்கிறது. *( 1 கொரி 15:3-4 ).*

**இப்படி நமக்கு கிடைத்திருக்கும் முக்கிய காரியங்கள்:**

1. **நீதிகரணம்**. பாவத்தினால் குற்றவாளி அல்ல என்று விடுவிக்கப்படுதல், ஒருவரை நீதிமானாக்குதல். *( ரோமர் 4:25; 5:8-9 ).*
2. **ஒப்புரவாக்கப்படுதல்**. நம் பாவங்கள் இயேசுவினால் நீக்கப்பட்டதால், தேவனுக்கும் நமக்கும் இடையில் ஒரு சுமூகமான உறவு. *( கொலோ 1:21-22 ).*
3. **மீட்பு**. பாவம் மற்றும் அதன் அடிமைத்தனத்திலிருந்து விலை கொடுத்து வாங்கப்படுதல். *( 1 கொரி 6:20; ரோமர் 3:24; எபே 1:7 ).*
4. **கிருபாதார பலி**. பாவத்துக்கான பலி, அது செலுத்தப்படும் இடம் *( ரோமர் 3:26; 1 யோவான் 2:2 ).*
5. **பரிசுத்தம்**. தேவனுக்காக பிரதிஷ்டை செய்யப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல்.

   *எபி 10:14 ஏனெனில் **பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை** ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.*

பழைய ஏற்பாட்டின் அடிப்படை கோட்பாடு " செய் " அப்போது நீ பிழைப்பாய் ( *ரோமர் 10:5* ). புதிய ஏற்பாட்டின் அடிப்படை கோட்பாடு **" செய்யப்பட்டிருக்கிறது "** ( *ரோமர் 10;6-9* ). இதில் அடங்கியிருப்பது மீட்பு, ஒப்புரவு, நீதிகரணம் இவற்றோடு கூட பரிசுத்தமும். நாம் இயேசுவுக்குள் பரிபூரணமுள்ளவர்கள்

*கொலோ 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*

## 2. தொடர்ந்து நடைபெறுகிற பரிசுத்தம். ( அனுபவப்பூர்வமான பரிசுத்தம், வாழ்க்கையில் பரிசுத்தம் ).

இந்த பரிசுத்தம், **"தீய வழிகளிலும், பாவக்காரியங்களிலும் இருந்து ஒரு விசுவாசி தொடர்ந்து வேறுபடுத்தப்படுதல்"**. இந்த அர்த்தத்தை குறிப்பிடுகிற பல வசனங்கள் வேதாகமத்தில் உள்ளன. இது ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் தொடர்ந்து நடைபெறுகிற பரிசுத்தம்.

இது, ஒரு விசுவாசியின் வாழ்வில் நடைபெற வேண்டும் என்பது தேவனுடைய சித்தம்.

*1 தெச 4:3 நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, 4 தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், 5 உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:*

சுவிசேஷத்தின் மூலமாக தேவன் விசுவாசிகளை *அழைப்பதன்* ஒரு குறிக்கோள் இது.

*1 தெச 4:7 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.*

### தேவனுடைய வார்த்தையினால் 'தொடர்ந்து பரிசுத்தம்'.

தேவன் இந்த பரிசுத்தத்தை தன் வார்த்தையின் மூலமாக நமக்கு கற்பித்து தருகிறார். இது தேவனிடம் இருந்து கற்றுக்கொள்ளப்பட வேண்டியது.

*1 தெச 4:5 உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:*

*யோவான் 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.*
இந்த ஜெபத்தில், இரண்டு முறை ( *வசனங்க 11,15* ) தேவன், தன் சீஷர்களை தீமையில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும்படியாக, இயேசு ஜெபிக்கிறார். இப்போது, தேவன் அதை எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்று சொல்கிறார். தேவன் இயேசுவின் சீஷர்களை பாதுகாத்துக்கொள்வது தன் வார்த்தையின் மூலமாக, அதாவது வேத வசனங்கள் மூலமாக. பாவத்தை, தீமையை வெறுத்து, உலக ஆசாபாசங்களில் வீழ்ந்து விடாமல், பரிசுத்தமாக, தேவனுக்காக வாழ விரும்புகிற எந்த ஒரு விசுவாசியும் தேவனுடைய வார்த்தையை நன்கு அறிந்திருக்க வேண்டும். **நாம் பரிசுத்தமாக்கப்படுவது வேதவசனங்கள் மூலமாக.**
*யோவான் 15:3 நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.*
*யோவான் 17:19 அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.*
*சங் 17:4 மனுஷரின் செய்கைகளைக்குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொள்ளுகிறேன்.*
*சங் 119:9 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே.*
*11 நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

இந்த பரிசுத்தத்தை ஒரு விசுவாசி ஆர்வத்தோடும் அக்கறையோடும் இடைவிடாமல் பின்பற்ற வேண்டும். நாம் இந்த பரிசுத்தத்தை தொடர்ந்து உண்மையாக பின்பற்றாவிட்டால் **நம்முடைய அன்றாட ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வதில் தடைகள் ஏற்படலாம்.** பரிசுத்தத்தை முழுமனதுடன் பின் தொடர்வது என்றால், இயேசு கிறிஸ்துவின் கோட்பாடுகளோடு ( principles ) நாம் ஒத்துழைக்கிறோம் என்று அர்த்தம். பரிசுத்தத்தை முழுமனதுடன் பின் தொடராமல் இருக்கிறோம் என்றால், நாம் இயேசுவின் கோட்பாடுகளோடு ஒத்துழைக்கவில்லை என்று அர்த்தம். ஒரு விசுவாசியின் முழு ஒத்துழைப்பு இல்லாமல் தேவனுடைய சித்தம் அவரது வாழ்க்கையில் நிறைவேற முடியாது. ( *எபே 3:20* ).
*1 தீமோ 2:15 அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.*
*எபி 12:14 யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.*
*1 தெச 3:13 இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.*

பரிசுத்தம் என்பது தேவன் செய்கிற ஒரு காரியம் அல்ல. அது தேவனுடைய உண்மையான சுபாவம். தேவன் பரிசுத்தமாயிருக்கிறார். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்ட திட்டங்கள் எல்லாமே, வேத வசனங்கள் எழுதப்படுவதற்கு முன்னமே, அவர் யார், எப்படி இருந்தார் என்பதையே வெளிப்படுத்துகின்றன. அது போலவே, **நமது பரிசுத்தமும் நாம் யார் என்பதன் வெளிப்பாடே, நாம் என்ன செய்கிறோம் என்பதன் வெளிப்பாடு அல்ல.** மறுபடியும் பிறந்ததன் மூலமாக ஒவ்வொரு விசுவாசியும் ஒரு நீதியான சுபாவத்தை பெற்றுக்கொள்கிறார் ( *எபே 4:24* ). நம்முடைய செயல்கள் இந்த புதிய சுபாவத்தை உருவாக்குவது இல்லை. புது சுபாவம் நமது செயல்களை உருவாக்கும். இதற்காக நாம் புது சுபாவம் நம் மனதை ஆளுகை செய்யும்படியாக அனுமதிக்க வேண்டும். நம்முடைய மறுபடியும் பிறந்த ஆவியில் வைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய அன்பை, நம்மூலமாக கடந்து வெளியே செல்ல நாம் அனுமதிக்கும்போது, பரிசுத்தம் ஒரு கனியாக நம்மிடம் இருக்கும். **பரிசுத்தம் இரட்சிப்பின் கனி. பரிசுத்தம் இரட்சிப்பை கொடுப்பது இல்லை.**

தேவனுடைய பரிசுத்த குணங்களை நம்மிடத்துக்கு மாற்றிக்கொடுக்க முடியாது. அவற்றை நம் கணக்கில் இடவும் முடியாது. இது ஒரு மனிதர் தேவனுடைய வார்த்தைக்கு முழுவதுமாக கீழ்ப்படிந்து, இயேசுவின் உதாரணங்களை பின்பற்றி நடந்து, சிறிது சிறிதாக கட்டியெழுப்பப்பட வேண்டியது. இது ஒருவருடைய தனிப்பட்ட சொத்து. இப்படி நடக்கும்போது நாம் தேவனுடைய குணங்களை உடையவர்களாகிறோம்.

*மத் 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.*
*யோவான் 13:15 **நான்** உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.*

*எபே 4:20* ***நீங்களோ*** *இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை.*
*பிலி 2:5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;*

இதை நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலேயே செய்ய வேண்டும்.
*ரோமர் 8:13 மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.*
*எபே 3:16 நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,*

இந்த பரிசுத்தத்தை நம் வாழ்க்கையில் நடத்திப்பது பரிசுத்த ஆவியானவர்.
தொடர்ந்து நடைபெறுகிற பரிசுத்தத்தை பற்றியதான வேத வசனங்கள்.
***லூக்கா 9:23; யோவான் 8:31; 14:26; 15:3; 16:13-16; அப் 13:43; 14:22; 15:41; 18:26; ரோமர் 1:11,17; 2:7; 4:12; 14:19; 1 கொரி 1:7-10; 11:31-34; 2 கொரி 3:18; 13:11; கலா 5:1,13, 16-21; எபே 4:1-32; பிலி 1:6,9, 25-27; 1 தெச 1:3-5; 2:13-17; 2 தீமோ 1:13-14; தீத்து 2:7-14; எபி 3:6,12-14; யாக் 1:3-4; 2 பேதுரு 1:4-10; 1 யோவான் 1:6-9; யூதா 1:3,20-24.***

## 3. பூரண பரிசுத்தம்.

இந்த பரிசுத்தம் ஒரு விசுவாசிக்கு கிடைப்பது அவர் மரணமடைந்து இயேசுவிடம் செல்லும்போதோ, அல்லது இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்போதோ.
*1 யோவா 3:2 பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.*
*எபே 1:4 தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,*
பூரண பரிசுத்தத்தை பற்றியதான வேதவசனங்கள்.
***மத்தேயு 10:22; 19:27-29; மாற்கு 10:29-30; லூக்கா 21:36; யோவான் 4:36. அப் 26:18. ரோமர் 2:7-10; 1 கொரி 1:8; 2 கொரி 4:16-18; கலா 6:7-8. எபே 1:4; எபி 3:6; 1 யோவான் 3:1-3.***

### பரிசுத்தவான்கள்.

பரிசுத்தவான்கள் என்ற அர்த்தத்துக்கான வார்த்தைகள் வேதாகமத்தில் சுமார் 39 முறை பழைய ஏற்பாட்டிலும், 62 முறை புதிய ஏற்பாட்டிலும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தை ஒரு போதும் தூதர்களுக்காக உபயோகப்படுத்தப்படவில்லை. இது மீட்கப்பட்ட மனிதர்களுக்காக மாத்திரமே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

வேதாகமம், இரட்சிக்கப்பட்ட அனைவரையும் பரிசுத்தவான்கள் என்று அழைக்கிறது. ***( அப் 9:13, 32, 41; 26:10; ரோமர் 1:7; 1 கொரி 1:2; 6:1-2; 2 கொரி 1:1; எபே 1:1; பிலி 1:1; கொலோ 1:2; 2 தெச 1:10; யூதா 1:3; வெளி 5:8; 13:7,10; 17:6.*** )
இதன் மூல கிரெக்க வார்த்தை 'ஹாஜியோஸ்' என்பதாகும். வேதாகமத்தில் இவ்வார்த்தை மாத்திரமே, பரிசுத்தத்துக்கான வேதாகம கோட்பாடுகளாகிய ஒழுக்கம், தூய்மை, ஆவியினால் நடத்தப்படுவது போன்றவற்றை முறையாக வெளிப்படுத்துகிறது.

**அன்பு சகோதரா சகோதரி,**
இந்த வேதபாடத்தில் இருந்து நீங்கள், பரிசுத்தம் என்றால் என்ன ? வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிசுத்தம், பரிசுத்தவான் ( ஆங்; holiness, sanctification, hallow, saint ) போன்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன ? வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று நிலைகளினால பரிசுத்தம் எவை ? பரிசுத்தத்தில் தேவனுடைய பங்கு எது, நம்முடைய பங்கு எது ? ஒரு விசுவாசி எப்படி பரிசுத்தமாக ஜீவிக்க முடியும் ? ஒருவர் எவ்வாறு பரிசுத்தத்தை பெற்றுக்கொள்ள முடியும் ? மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி ஏற்கனவே பரிசுத்தமாக்கப்பட்டு இருக்கிறாரா, இல்லையா ? இனி நமக்கு கிடைக்கப்போகிற பரிசுத்தம் என்ன ? போன்ற பல காரியங்களை தெளிவாக மனதிலாக்கி இருப்பீர்கள் என நம்புகிறேன்.
ஒரு வேளை நீங்கள் இரட்சிக்கப்படாதவராக இருந்தால், உடனே இரட்சிக்கப்பட்டு, தேவன் தருகிற பரிசுத்த பதவியை பெற்றுக்கொள்ளுங்கள்.
நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இருந்தால், நீங்கள் பரிசுத்தவான் என்பதை நன்றாக மனதிலாக்கிக்கொள்ளுங்கள். இயேசுவுக்குள் உங்களது பரிசுத்த பதவியில் இருந்து, அனுதின வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் உதவியோடு அவரது வார்த்தையின் மூலமாக தொடர்ந்து பரிசுத்தத்தில்

முன்னேறுங்கள். பாவக்காரியங்களில், தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களில் இருந்து தொடர்ந்து வேறுபடுத்தப்படுங்கள். பூரண பரிசுத்தத்துக்காக காத்திருங்கள். மற்றவர்களையும் இந்த பரிசுத்த நிலமைகளுக்குள் கொண்டு வாருங்கள்.

**நீங்கள் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான் என்றால் இந்தபாடலை பாடி தேவனை துதியுங்கள். எப்பொழுதும் பரிசுத்தவானாக இருங்கள். நீங்கள் பரிசுத்தவான் என்று அறிக்கையிடுங்கள். உங்களை இந்த மகாப்பெரிய பதவிக்குள் அழைத்த தேவனுக்கு சாட்சியாக ஜீவியுங்கள்.**

## நான் பரிசுத்தன்

**நான் பரிசுத்தன்......... நல்ல பரிசுத்தன்....**
**என் தேவனாலே ஆக்கப்பட்ட சுத்த பரிசுத்தன்...**
**அவர் தயவினாலே அழைக்கப்பட்ட பக்த பரிசுத்தன்...**

**உலக வாழ்க்கையை உதறி தள்ளிவிட்டு...**
**உன்னதர்க்காய் உழைத்து வாழ அழைக்கப்பட்ட பரிசுத்தன் (2)**
**பாவ சாபமோ... பாழும் உலகமோ... (2)**
**கறை தரவே முடியாத நித்திய பரிசுத்தன்**
**அவர் இரத்தத்தாலே கழுவப்பட்ட சத்திய பரிசுத்தன் . . . . . நான்**

**தேவ அன்பினால்..... தேவ கிருபையால்**
**தேடி என்னை மீண்டெடுத்து கொண்டதனால் பரிசுத்தன் (2)**
**ஓடிச்சென்றாலும்....... வாடி நின்றாலும்..... (2)**
**கிடைத்திடாது இந்த மகாப் பெரிய பரிசுத்தம்...... இது**
**கிருபையினால் மாத்திரமே கிடைக்கும் பரிசுத்தம் . . . . . நான்**

**நித்திய வாழ்க்கையை...... சத்திய வசனத்தால்....**
**நிதந்தோறும் பரிசுத்தமாய் நடத்தி செல்லும் பரிசுத்தன்..... (2)**
**எந்த நிலையிலும்..... எந்த விதத்திலும்....... (2)**
**இயேசு சொன்ன வார்த்தைபடி வாழும் பரிசுத்தன்.... அவர்**
**பரிசுத்த ஆவியாலே நடக்கும் பரிசுத்தன். . . . . . நான்**

---------------------------------------------

ஆமென்.

Be blessed. You are a blessing. If you are a saved person, Always remember **'You are a saint'. Otherwise, Become a saint, by accepting Jesus as your Savior.**

**Bro.D.Vergin kumar.**
If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557. Your comments, if they will really edify the body of Christ, are welcome.
Resources; Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Wuest's bible commentary, Expanded New Testament, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament, International Standard Bible Encyclopedia, Wuest's New Testament word studies …etc. All bible quotes mentioned in group, are from King James Version bible, unless quoted otherwise. In the Tamil bible some verses may by before or after.

-----------------------------------